## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

### அரசு தரப்பு சாட்சி 13 (LW17) வாக்குமூலம்

### சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | எழிலரசி | வட்டம் | - | |
| த/பெ | - | ராஜேஸ் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 22.07.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர் இல்லை, எதிரியிடம் சட்ட உதவி மையம் மூலம் வழக்கறிஞர் ஏற்பாடு செய்யவேண்டுமா என்று கேட்டதற்கு தேவையில்லை என்று கூறினார்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் கஞ்சனூர் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது அனந்தபுரம் காவல் நிலைய குற்ற எண்.1696/2020 பிரிவு 174(i), Cr.PC படி 27.10.2020ம் வருடம் அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார்தாரர் நிர்மலா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று உதவி ஆய்வாளர் திரு.நரசிம்மஜோதி என்பவா பதிவு செய்து வைத்த முதல் தகவல் அறிக்கைப்படி எனக்கு முன்பு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திருமதி.ஜெயந்தி முதல்கட்ட புலன்விசாரணை செய்து வைத்திருந்த கோப்பை தொடர்ந்து புலன்விசாரணைக்கு நான் எடுத்துக்கொண்டேன்.

19.11.2020ம் தேதியில் காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று ஏற்கனவே ஆய்வாளர் ஜெயந்தி அவர்கள் விசாரித்த சாட்சிகளை விசாரணை செய்து அவர்கள் கூறியபடியே என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ஆனால் புகார்தாரர் நிர்மலா அவரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேற்படி வழக்கில் சாட்சியாக முதற்காட்ட விசாரணை சாட்சிபட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்த தாமோதரன் என்பவர் இவ்வழக்கில் எதிரி என்று தெரிந்து நான் கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அன்றைய தினமே இவ்வழக்கில் சாட்சியாக இருந்தவர் எதிரியாக உள்ளார் என்பதை தெரிவித்து வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். அதே நாளில் ஏற்கனவே 174(1) Cr.P.C ல் இருந்ததை 304(ii) ஆக மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் சம்பவம் உண்மை என தெரிந்து எதிரி தாமோதரன் என்பவரை அதே தேதியில் 17.45 மணிக்கு எதிரியின் நிலத்தின் அருகே சாட்சிகள் வெற்றிகொண்டான், அருணாச்சலம் ஆகியோர்கள் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்தேன். மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரியானவர் எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி வாதி நிலத்தில் மறைத்து வைத்திருந்த 1 மீட்டர் நீளமுள்ள ஒயருடன் கூடிய வெள்ளை நிற பீஸ் கேரியர் ஒன்று, சுமார் 2 மீட்டர் நீளமுள்ள இரும்பு கட்டுக்கம்பி ஒன்று மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே அதசாஆ.5 ஆகவும் கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அதசாஆ.6 ஆகவும் சான்றுபொருட்கள் சாபொ.5 மற்றும் 6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினமே இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் நரசிம்மஜோதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட சான்றுபொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி படிவம் 91 அதசாஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அனந்தபுரம் உதவி மின்பொறியாளர் அவர்கள் மின்வேலியில் சிக்கி இறந்தது சம்மந்தமான பதிவு செய்யப்பட்ட புகாரின் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பினார். வேண்டுகோள் கடிதம் அதசாஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இந்த வழக்கில் அனந்தபுரம் உதவி மின்பொறியாளர் அவரிடமிருந்து மின்இணைப்பு சம்மந்தமான ஒரு அறிக்கையினை பெற்றேன். மேற்படி வரைபடத்துடன் கூடிய சான்று ஏற்கனவே அதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவருடைய அறிக்கை அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கிராம நிர்வாக அலுவலர் வெற்றிகொண்டார் அவரிடமிருந்தும் புல எண்கள் குறித்து ஒரு சான்று பெற்றேன். மேற்படி சான்று அதசாஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்த தனசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் பிரேத பரிசோதனை அலுவலராக சென்ற தலைமை காவலர் 619 திரு.வெங்கடேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் உதவி பொறியாளர் சிவபிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அருண் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் வழக்கில் சாட்சிகள் நிர்மலா, செல்லதுரை ஆகியோர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஏற்கனவே 304(ii) IPC படி இருந்த வழக்கினை 304(ii) IPC and 135(i)(a) Electricity Act 2003 படி பிரிவு மாற்றம்

செய்து அந்த அறிக்கையினை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மேற்படி பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இந்த வழக்கில் விசாரணை முடித்து அரசு வழக்கறிஞர் கருத்துரை பெற்று மேற்படி எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

அசா.2 செல்லதுரை அவரை விசாரித்த போது அவர் 24.10.2020 அன்று தனது நிலத்திற்கு சென்றதாகவும் மறுநாள் 27.10.2020 வீட்டிலிருந்து அசா.1 நிர்மலா அவர்கள் கணவர் குப்பன் என்பவர் சுப்பிரமணி மற்றும் கோவிந்தன் ஆகியோர் நிலத்திற்கு நடுவில் நெற்பயிர் செய்து வந்த வரப்பின் குறுக்கே கட்டியுள்ள கம்பியில் அடிபட்டு இறந்ததாக தகவல் கேட்டு அங்கே போய் பார்த்ததாகவும் அந்த இடத்தில் மின்கம்பத்திலிருந்து ஒயர் மூலம் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததாகவும் அதில் குப்பன் மாட்டி இறந்து அந்த இடத்தில் கவிழந்த நிலையில் இறந்துகிடந்தார் என்றும் அதனை தானும் மற்றும் சிலர் பார்த்ததாகவும் அங்கு மின்கம்பி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் மின்சாரமானது 495/023/860 கம்பத்திலிருந்து யாரோ வேண்டுமென்றே லைன் எடுத்ததாகவும் கூறியுள்ளார்.

அசா.5 கோவிந்தன் எனது விசாரயைில் 27.10.2020ல் காலை 5.30 மணிக்கு தான் வரப்பு வழியாக போகும் போது குறிப்பாக குப்பன், கோவிந்தன் மற்றும் சுப்பிரமணியம் நிலத்திற்கு நடுவில் குப்பன் நெற்பயிர் செய்த வரப்பின் குறுக்கே யாரோ கட்டுக்கம்பிகளை கொண்டு கட்டப்பட்டு அதில் அருகில் இருந்த மின் கம்பத்திலிருந்து ஒயர் மூலம் மின்சாரம் செலுத்தியுள்ளனர் என்றும் அதை தான் கவனிக்காமல் காலையில் எனது நிலத்து பக்கம் இருந்து குப்பன் நிலத்து பக்கம் வரும் போது எனக்கு மின்சாரம் தாக்கியதால் நான் சுதாரித்துக்கொண்டு

என்னவென்று பார்த்த போது அங்கு குப்பன் கவிழ்ந்த நிலையில் வரப்பின் மீது கடந்தான என்றும் அதை அவர் பார்தததாவும் என்று கூறியுள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.